# அலகு 1

1. தேவாரம் -திருஞானசம்பந்தர் - திருவேதவதனம்
2. திருவாசகம் (ஆசைப்பத்து /வாழாப்பத்து)
3. கந்தர் கலிவெண்பா

# 1. தேவாரம் திருவேதவதனம்

**சிவ பெருமானின் சிறப்புகள்**

**தல விளக்கம்**

- காவிரித் தென்கரைத் தலங்களுள் 125 வது திருத்தலம்.
- மூவரால் பாடப்பெற்ற தலம்.
- வேதங்கள் வழிபட்டது.
- வேறு பெயர்கள் - கயிலாயம், திருமறைக்காடு, வேதாரண்ய்யம், சத்யகிரி

# இறைவன் உயிர்களுக்கும் அருளும் நிலை

- தீய வினையால் நேரும் துன்பங்களை அறச்செயல்களால் நீக்கப்பெறும் வழியினை இப்பாடல்கள் உணர்த்துகின்றன.
- இறைவனின் ஒப்பற்ற தன்மையால் உலக உயிர்களும் மெய்த்தன்மை உணர்த்த பக்தர்களும் சித்தர்களும் விளங்கி மகிழ்ந்து உரையும் வேதவதனம் சிறப்பிக்கப்படுகிறது.
- வேதவதனத்தில் உரையும் இறைவன் வெண்ணீற்று மேனியன். இவ் இறைவனை இந்தப் பத்துப் பாடல்களை கொண்டு பாடினால் உயர்ந்த வானுலகத்தைப் பெறுவார்கள். (தாலோகப் பதவியினைக் குறிப்பதாயிற்று)

# 2. திருவாசகம்

- அடியவன் உய்தி பெறும் வண்ணம் நீ என்னை அடிமை தியானம் செய்து வாழும் நான்; பிறரை வழிபடல் துதித்தல், தியானம் செய்தல் முதலியன செய்வனோ. என் கருவிகரணங்களை இம்மண்ணுலகில் வைக்காத நான் இங்கு வாழும் ஆற்றலற்றவன். என்னை நின்கண் "வருக" என்று அழைக்கும் திருவருளைப் புரிய வேண்டும்

- நிலவுலகும் விண்ணுலகும் வியாபித்துள்ள எம்பரனே; சீரொடு பொலியும் சிவபுரத்து மன்னவனே; திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள செம்மணியே; விணுலவாசிகளும் அறிய இயலாத ஒப்பற்றவனே; உலகை நடம் புரியும் அம்பலவாணனே.

- உயிர்கள், கேவலம் சகலம், சுத்தம், வீடுபேறு என்ற அனைத்து நிலைகளிலும் இறைவனுக்கு அடிமைகளே.
- அநாதி கேவலநிலையிலுள்ள உயிர் தனுகரணபுவன போகங்கள் பெற்று வினைகளைச் செய்து அவற்றின் பயன் நுகர்ச்சியால் சிறிது சிறிதாக ஆணவ மலப்பிணிப்பு நீங்கி ஞானம் பெற்றுப் படிப்படியாக ஆன்ம முன்னேற்ற முற்று முடிவில் வீட்டுலகம் அடைந்து இன்பு வேண்டும் என்பது இறைவன் திருவுள்ளம்.

# ஆசைப்பத்து (ஆத்தும இலக்கணம்)

- "நம்மால் வேண்டுவது யாது" என்ற உசாவி அலர் இடுக்கண் களைவது இயல்பு. ஈண்டு நம் அடிகள், "அவ்விடுக்கண் என் மலபந்தமே; அதனை நீக்குவதற்கு நின் திருவருள் வேண்டும்; அதனை எய்த ஆசைப்பட்டேன்" என்று விண்ணப்பம் செய்தல்.
- ஆசை என்பது ஒரு பொருளை அடைய விரும்பி அதற்கான தகுதி தம்மிடம் உள்ளதா; இல்லையா; என்பதைக் கருதாமல் விரும்பிய பொருளை எய்த முயலுதல்.

- உயிர்கள், உணர்த்த உணரும் இயல்பின.
- திருவருளுடன் உயிர் கலந்து அத்திருவருளுடன் சிவத்தைப் பாருந்தினால் மட்டுமே சிவானந்தம் நுகர இயலும். இஃது ஆன்மாவின் இலக்கணம்.

**கழல்**

ஆணவ மலத்தின் வலியை மடக்கி எண்ணற்ற உயிர்களுக்குத் தொடர்ந்து வீட்டின்பம் நல்கிக் காத்துவரும் வீரம் குறித்தது.

- ஒளி மயமானவன்; ஒளிகளுக்கெல்லாம் பேரொளியாகி ஞானம் நல்குபவன்.

# பழைய திருப்பெருந்துறைப் புராணம்

"கருவியுறும் ஊனுடற்கண் வாராமற் திருவருளிற் கலப்பதற்கே

அரனடியைப் புகழ்ந்துபெரு கார்வமொடு பாடுதலே ஆசைப்பத்தாம்"

# வாழாப்பத்து முத்தியுபாயம்

- **புளியம் பழம் ஒத்து இருந்தும் இருந்தேன்.**

புளியம் பழத்தின் உட்பகுதியில் உள்ள புளி மிகவும் பழுத்திருக்க அதன் பழுத்தநிலை வெளியில் புலப்படாமல் பழத்தின் கடினமான ஓடு மூடியிருப்பது போல என் உள்ளே மிகவும் பழுத்த புண்ணிகியுள்ள நிலை வெளியில் புலப்படாமல் மேலே தோல் மூடியுள்ள இழிந்த நிலையிலும் நான் இவ்வுடலைத் தாங்கிக் கொண்டு உயிருடன் இருக்கின்றேன்.

# 'எளிவந்து என்னை ஆட் கெண்ட என் ஆரமுதே'

- விண்ணுலக வாசிகளுக்கும் அரிய நீ ஒன்றுக்கும் பற்றாத என்னைப் பொருட்படுத்தி என் உடலை நீக்காமை இயல்புதானோ எனில்; அற்றன்று; என் பொருட்டு நீ இம்யண்ணுகு வலிய வந்து திருப்பெருந்துறையில் என்னை ஆட்கொண்ட எளிமைப்பாட்டினன்.

# 3.கந்தர் கலிவெண்பா

**இறைவனது தன் இயல்பு**

- ஐந்தொழில் புரிபவன்.
- அந்தம் கடந்த நித்தியானந்தப் பொருளாய் நிற்பவன், புராணமாய் நித்தமாய் போக்குவரவு புரிபவன்.
- அநாதி

# இறைவனது பொதுஇயல்பு

- உரு, அரு, உரு அரு
- பருவ வடிவம் பலவாய் இருப்பவன்.
- இறைவன் உயிர்களுக்கு பண்டத்தை விளைவித்தல்.
- மந்த்ர முதல் ஆறு அத்துவாக்கள் கடந்திருப்பவன.
- உயிர்களுக்கு நால்வகை தோற்றத்தை தருவிப்பவன்.

# இறைவன் உயிர்களுக்கு முக்தி தருதல்

- சரியை, கிரியை, யோகம் சார்வித்தல்.
- நால்வகையாம் சத்திநிவாதம் அருள்வித்து.
- குருபர நின்றோர் என்று ஓர் திருப்பேர் கொண்டு
- ஊழ்வினையை போக்கி உயிர்களுக்கு அருளுதல்
- ஆன்ற பெருமுக்தி அடைதல்.

# இறைத் தசாங்கம்

1. பொருப்பு
2. பெருக்காது
3. திருநாடு
4. அணிநகர்
5. குரகதம்
6. கடாக்களி
7. நறுந்தொடை
8. பான்கொடி
9. மணிமுரசு
10. ஆணை

## திருவிளையாட்டு

- நவவீரருக்குள் முன்னோன் வீரபாகு.

## அறுபடை வீடுகளும் திரு எழுத்துகளும்

- ஆறு திருப்பதி கண்டு, ஆறெழுத்து அன்பினுடன் கூறும் அவர் சிந்தை குடிகொண்டவன் செவ்வேள்.